தேதி: 9 பிப்., 2014

## கடந்த பத்தாண்டுகளில் காங்கிரஸ் கட்சி சி.பி.ஐ.யை கையாண்ட விதம்

**அருண் ஜேட்லி**
**மாநிலங்களவை எதிர்கட்சித் தலைவர்**

நேற்று எகனாமிக் டைம்ஸ் பத்திரிகை சி.பி.ஐ. இயக்குனர், ஸ்ரீ ரஞ்சித் சின்ஹாவின் ஒரு அறிக்கையை வெளியிட்டிருந்தது. உண்மை வெளியே வந்துவிட்டது. இஷ்ரத் ஜஹான் வழக்கில் அமித் ஷா குற்றம் சாட்டப்பட்டிருந்தால் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு மகிழ்ச்சியடைந்திருக்கும் என்று கூறியிருந்தார். அவர் மேலும் அமித் ஷாவுக்கு எதிராக சி.பி.ஐ.க்கு எந்த சாட்சியமும் கிடைக்கவில்லை என்றார். இந்த அறிக்கை அரசுக்கு எதிராக மோசமான விமர்சனங்கள் எழும் வாய்ப்புள்ளது என்று எதிர்பார்க்கப்பட்டதால், சி.பி.ஐ. இயக்குனர், தான் தவறாக மேற்கோள் காட்டிவிட்டதாக ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு விளக்கத்தை வெளியிட்டார். ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் ஆட்சி காலம் முடிவை நெருங்கிக் கொண்டிருப்பதால், சி.பி.ஐ. இயக்குனரின் அறிக்கை மற்றும் விளக்கம் ஆகியவற்றின் சுதந்தரத்தன்மையில் உள்ள அரசின் குறுக்கீடுகள் குறித்து தீவிரமாகப் பரிசீலனை செய்யப்படுவது பயன் தரும்.

காவல் துறையையும் புலனாய்வு அமைப்புகளையும் பயன்படுத்தி வழக்கு ஜோடிப்பது ஒன்றும் பொதுவாக நடக்காத ஒரு விஷயம் அல்ல. நெருக்கடி நிலை பிரகடனம் செய்யப்பட்ட காலகட்டத்தில், இதை எதிர்த்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக போடப்பட்ட கிட்டத்தட்ட இரண்டு லட்சம் எஃப்.ஐ.ஆர். (முதல் தகவல் அறிக்கை) ஜோடிக்கப்பட்டவைதான். தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தவர்கள் நெருக்கடி நிலை பிரகடனம் செய்யப்பட்டிருந்த காலகட்டத்தில் அமலில் இருந்த உள்நாட்டு பாதுகாப்பு பராமரிப்புச் சட்டத்தின் கீழும் (மிசா) மற்றவர்கள் இந்திய பாதுகாப்பு விதிமுறைகள் சட்டத்தின் கீழும் சிறையில் அடைக்கப்பட்டனர். அப்போது போலீசார் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கைகளில் பெரும்பாலானவை இப்படிப்பட்டவைதான். பால் பூத்துகளிலும், பேருந்து நிலையங்களிலும் காங்கிரஸ் அரசை எப்படி தூக்கி எறிவது என்பதைப் பற்றி விடியற்காலை நேரங்களில் உரை ஆற்றிய எதிர்கட்சி அரசியல் தொண்டர்கள் குற்றம் சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். தடுப்புக் காவலில் வைப்பதற்கான எந்த ஆதாரமும் இருந்ததில்லை. ஒரே ஒரு காவல் துறை அதிகாரிகூட அப்பாவி மக்களை கைது செய்து போலியாக எஃப்.ஐ.ஆர். போட மாட்டேன் என்று எதிர்த்து நிற்கவில்லை என்பது மிகவும் வருத்தத்திற்குரிய ஒரு விஷயம். ஒட்டுமொத்தமாக அனைவருமே நெருக்கடி நிலை கொடுங்கோலாட்சிக்கு ஆதரவாக உறுதுணையாக இருந்தனர்.

2004-2014 ஆண்டு வரையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் மத்திய புலனாய்வு அமைப்பை மோசமாக கையாளும் கலையில் நிபுணத்துவம் பெற்று விட்டனர். இந்த காலகட்டத்தில் சி.பி.ஐ., அரசால் கட்டுப்படுத்தப்படவில்லை. அதைவிட மோசமாக ஆளும்கட்சியால் கட்டுப்படுத்தப்பட்டது. சி.பி.ஐ. இயக்குனராக ஒரு வளைந்து கொடுக்கும் நபர் தேர்ந்தெடுக்கப்பட்டார். சி.பி.ஐ. ஒரு அமைப்பாக அதன் இயக்குனரால் நிர்வகிக்கப்படுகிறது. அவர்தான் இறுதி முடிவு எடுக்க வேண்டும். புலனாய்வு அதிகாரிகள் ஒரு நபர் மேல் குற்றம் சாட்டவோ அல்லது குற்றத்திலிருந்து விடுவிக்கவோ புலனாய்வு கோப்பு ஒன்றைத் தயாரித்தனர். உட்புற கட்டுப்பாடு மற்றும் பாரபட்சமற்ற நிலை ஒட்டுமொத்தமாக சீர் குலைந்தது. இயக்குனர்கள் தங்கள் பணி ஓய்வு காலத்தில் புதிய பணிகள் தேடி வந்தன. பணி ஓய்வுக்குப் பிறகு வேறு பணிகள் உறுதி செய்யப்பட்டது.  ஆனால், இந்த வாய்ப்புகள் அவர்களது வளைந்து கொடுக்கும் தன்மையின் அடிப்படையில் இருக்கும். இதன் இயக்குனர்களுக்கு பணி ஓய்வுக்குப் பிறகு கவர்னர் பதவி முதல் யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷனில் உறுப்பினர் பதவி வரை அளிக்கப்படும் என்று உறுதிகூறப்பட்டது. இஷரத் ஜஹான் வழக்கில் அமித் ஷா மேல் குற்றம் சாட்டுவதில் விசேஷ ஆர்வம் காட்டிய சமீபத்தில் பணி ஓய்வு பெற்ற ஒரு சிறப்பு இயக்குனர் பணி ஓய்வு பெறும் முன்பே ஜாமியா மில்லியா இஸ்லாமியா என்ற அமைப்புக்கு வைஸ் சான்சிலராக நியமிக்கப்பட்டார். இவர் மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையராக நியமிக்கப்படுவதற்கான பரிந்துரைக்கப்பட வேண்டிய நபர்களின் பட்டியலில் இவருடைய பெயரும் இருந்தது என்று பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகி இருந்தன.

சமீபத்தில் நான் பிரதம மந்திரிக்கு எழுதிய விரிவான கடிதத்தில், அமித் ஓ, குலாப் சந்த கட்டாரியா மற்றும் ராஜேந்திர ராட்டோர் போன்ற மூத்த பா.ஜ.க. தலைவர்கள் சி.பி.ஐ.யினால் தவறாக குற்றம் சாட்டப்பட்டுள்ளனர் என்று குறிப்பிட்டிருந்தேன். அமித் ஷாவைப் பொறுத்தவரை அவருக்கு பெயில் வழங்கப்பட்டபோது, இவருக்கு எதிராக முன்னதாக வேறு எந்த வழக்கும் இருக்கவில்லை. குலாப் சந்த் கட்டாரியாவுக்கு எதிரான வழக்கில், விசேஷ நீதிபதி அவருக்கு முன் ஜாமீன் வழங்கியதிலிருந்து அந்த வழக்கு போலி என்பது வெளிப்படையாகத் தெரிந்தது. ராஜேந்திர ராட்டோருக்கு எதிரான வழக்கில் விசேஷ நீதிபதி, குற்றம் சுமத்தப்பட்ட கட்டத்திலேயே அவரை விடுவித்துவிட்டார். ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு சமாஜ்வாதி மற்றும் பி.எஸ்.பி. கட்சிகள் வெளியிலிருந்து தரும் ஆதரவுடன் ஒரு மைனாரிட்டி அரசாக பதவியில் இருந்து வருகிறது. இந்த இரண்டு வழக்குகளிலும் சி.பி.ஐ.யின் ஒத்துழைப்புடன்தான் இந்த இரண்டு கட்சிகளின் ஆதவைப் பெற்றுவருகிறது. இதன் மூத்த தலைவர்கள் சொத்து குவிப்பு வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

எகனாமிக் டைம்ஸ் பத்திரிகையில் வெளிவந்த சி.பி.ஐ. இயக்குனரின் மறுப்பு ஒன்றுமே இல்லை. சி.பி.ஐ.யின் வளைந்து கொடுக்கும் தன்மை பற்றியும் சுதந்தரமாக செயல்பட முடியாத அதன் நிலை பற்றியும் ஏராளமான நிரூபணங்கள்

உள்ளன.

*********